மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : அதுவும் இணைக்கப்பட்டிருக்கிறது.

Tuticorin Boat Owners Association.

* 336 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Labour be pleased to state whether the Government are aware of the decision of the Tuticorin Boat Owners Association to boycott handling of goods bound to Colombo ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : ஆம். ஆனால் இயல்பான படகுப் போக்குவரத்து அதன்பின் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

திரு கே. விநாயகம் : இந்தப் படகுச் சொந்தக்காரர்கள் எந்தக் காரணத்திற்காக சரக்குகளை ஏற்றுமதி செய்யமாட்டோம் என்று சொன்னார்கள் ? அப்போதுள்ள காரணங்கள் இப்போதும் இருக்கிறதா அல்லது அவை எல்லாம் நிவர்த்திக்கப்பட்டனவா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : கப்பலில் ஏற்றிச் சென்ற சில சாமான்கள் வெட்பதட்ப சூழ்நிலைக்கேற்ப அதில் இருப்பது அபாயம் என்று அந்தக் கப்பல் மாலுமி கருதியதால் அதிலுள்ள பொருள்களை கடலில் தூக்கி எறிந்துவிட்டார்கள். அப்படி எறிந்த பிறகு கப்பல் கொழும்பு போய் சேர்ந்தது. அங்கிருந்த சுங்க அதிகாரிகள் இந்தப் பொருள்களைக் கடலில் எறிந்தது குற்றம் என்று சொல்லி ஐயாயிரம் ரூபாய் அபராதம் விதித்தார்கள். அதைக் கட்ட மறுத்து பிறகு அதுகுறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அது முடிந்த பிறகுதான் தெரியும்.

திரு எஸ். ஜே. ராமசாமி : அந்த வழக்கைப்பற்றிக் கூறினார்கள். அந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் போடப்பட்டுள்ளதா அல்லது சிலோனில் போடப்பட்டுள்ளதா ? எந்த இடத்தில் எந்தச் சர்க்காரால் போடப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அங்குள்ள வெளி விவகார இலாகா அதிகாரிகள் சுங்க இலாகா அதிகாரிகள் இவர்களோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். எங்கு வழக்கு நடக்கிறது என்ற விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

Electricity connection to agricultural pumpsets in Sowkiapuram village.

* 337 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the number of applications from the agriculturists of Sowkiapuram village in Santankulam Panchayat Union Council area in Tirunelveli district, pending grant of electricity connection to agricultural pumpsets ; and

(*b*) when electricity connection will be given for those applicants ?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : (அ) & (இ) சாத்தான்குளம், ஊராட்சி ஒன்றியக் குழுப் பகுதியிலுள்ள சௌக்கியபுரத்தில் வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின்சக்தி வழங்கும்படி கேட்டு ஐந்து விண்ணப்பங்கள் வந்துள்ளன. அருகிலுள்ள கிராமமாகிய அடுப்புவிளையிலிருந்து வந்த விண்ணப்பங்களையும் மேற்குறிப்பிட்ட விண்ணப்பங்களையும் சேர்த்து ஆதாயமுள்ள செயற்குறிப்பு ஒன்று தயாரிக்கப்பட்டது. அதற்கு 31-7-1968